**சுருக்கம்**

நிலஎடுப்பு – காஞ்சிபுரம் மாவட்டம் – திருப்பெரும்புதூர் வட்டம் – நெ.134 ஒரகடம் கிராமம் புல எண்.190/28 பகுதியில் ஒரகடம் தொழிற்பூங்கா சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை மற்றும் வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையுள்ள சாலை விரிவாக்கப் பணிக்கு நில எடுப்பு செய்தல் – தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம்–2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) பிரிவு–15 உட்பிரிவு (1)–ன் கீழான அறிவிக்கை – தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.1) துறை**

**அரசாணை (2டி) எண். 1** **நாள் : 03-01-2018**

**ஹேவிளம்பி, மார்கழி–19, திருவள்ளுவர் ஆண்டு 2048**

**படிக்கவும்:–**

மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடித எண். ந.க. 46719/2009/எப்2, நாள் 13–10–2017.

**********

**ஆணை:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், எண்.134 ஒரகடம் கிராமம், புல எண்.190/28 பகுதியில் ஒரகடம் தொழிற்பூங்கா சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை மற்றும் வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையுள்ள சாலை விரிவாக்கப் பணிக்கு 1737 ச.மீ (கிராம நத்தம்) நிலங்களை நிலஎடுப்பு செய்ய மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்களால் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் 2001, பிரிவு 15(1)–ன் கீழான அறிவிக்கைக்கு அரசால் ஏற்பளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணையிடப்படுகிறது.

2. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கையினை, தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறும், அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழின் 10 நகல்களை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9 மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் ஆகியோருக்கு அனுப்புமாறும் அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79 (இணைப்புடன்),
தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
சென்னை–25.

மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்.
மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம்.

**நகல்**
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.

**கோ. எண்.12908/எச்.எஸ்.1/2017**

இருப்பு கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## அறிவிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், நெ.134 ஒரகடம் கிராமம், புல எண்.190/28 பகுதியில் ஒரகடம் தொழிற்பூங்கா சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை மற்றும் வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையுள்ள சாலை விரிவாக்கப் பணிக்கு கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதுமான நிலங்கள் தேவைப்படுகின்றது என்று தமிழ்நாடு அரசுக்கு தோன்றுவதால் நெ.134 ஒரகடம் கிராமத்தில் கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 1737 ச.மீ. நிலத்தை (கிராமநத்தம்) கையகப்படுத்தவும், ஏற்கெனவே முடிவு செய்தபடி மேற்படி நிலங்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை நெடுஞ்சாலைத்துறை, தலைமைப் பொறியாளரால் பராமரிக்கப்படும் வைப்புக்கணக்கிலிருந்து வழங்கவும், தீர்மானித்து மேற்காணும் நிலங்களின் உரிமையாளர், உரிமை கோருபவர், அனுபவத்தில் வைத்துள்ளவர்கள் அளித்த காரணங்களையும் பரிசீலனை செய்தபின் 2001ம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் பிரிவு 15(1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)ன்படி கீழ்க்காணும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்படுகிறது.

## அறிவிப்பு

த்மிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம்–2001, பிரிவு 15(1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)ன் கீழ் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், நெ.134 ஒரகடம் கிராமத்தில் ஒரகடம் தொழிற்பூங்கா சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சிங்கபெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை மற்றும் வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையுள்ள சாலை விரிவாக்கப் பணிக்கு கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 1737 ச.மீ. நிலங்கள் (கிராமநத்தம்) கையகப்படுத்தப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கின்றார்.

## அட்டவணை

**மாவட்டம்:** காஞ்சிபுரம் **வட்டம் :** திருப்பெரும்புதூர்

**கிராமம் :** நெ.134. ஒரகடம்

1) வடக்கில் புல எண்–27. கிழக்கில் புல எண்–190/28 பகுதி, தெற்கில் புல எண்–190/5 பகுதி, மேற்கில்–190/1, 190/4ஏ பட்டா அக்கரையுள்ள நபர்கள் திரு.ஸ்ரீதர்–1, திரு.துரைபாபு–2 ஆகியோருக்கு சொந்தமானதுமான புல எண்–190/28 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் – 190/36 நில அளவை கொண்ட கிராமநத்தம் நிலம். சிமெண்ட் ஷீட் மற்றும் Tin ஷீட்டால் ஆன கடை –1, Tin ஷீட் போட்ட கடை–1, சிமெண்ட் ஷீட் போட்ட கடை –1, தளம் போட்ட கடை–1.

பரப்பு 00942 சதுர மீட்டர்

2) வடக்கில் புல எண் –27, கிழக்கில் புல எண் –190/28 பகுதி, தெற்கில் புல எண்–190/28 பகுதி, மேற்கில்–190/1, 190/34 பட்டா அக்கரையுள்ள நபர்கள் திரு.ஸ்ரீதர்–1, திரு.துரைபாபு–2 ஆகியோருக்கு சொந்தமானதுமான புல எண்–190/28 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் – 190/35 நில அளவை கொண்ட கிராமநத்தம் நிலம். தளம் போட்ட கடை – 10, Tin ஷீட் போட்ட கடை – 1, சிமெண்ட் ஷீட் போட்ட கடை–10

பரப்பு 00795 சதுர மீட்டர்

**மொத்த பரப்பு 01737 சதுர மீட்டர்**

ஒப்பம்/–xx
ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.